New Apostolic Church

# நன்றி செலுத்துதல் 2022

அன்பு சகோதர சகோதரிகளே,

அக்டோபர் 8, 2022, ஞாயிறன்று நாம் நம் திருச்சபையின் நன்றி செலுத்தும் நாளை நெருங்குகிற வேளையில், நாம் எவைகளுக்கெல்லாம் நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்பதனைக் குறித்து சிந்திப்பதற்கான ஒரு வாய்ப்பைப் பெறுகிறோம் : நம் விசுவாசம், குடும்பம், நண்பர்கள் மற்றும் நம் வாழ்வின் பலதரப்பட்ட ஆசீர்வாதங்கள்.

அடிக்கடி நம் நன்றிப்பெருக்கானது கடந்த கால மற்றும் நிகழ்காலங்களால் சூழ்ந்திருக்கிறது. அது தேவனுக்கு நன்றி செலுத்துவதற்கான காரணங்களை முன்னதாகவே தாராளமாக அருளுகிறது !

நாம் நம் எதிர்காலத்தை நோக்கிப்பார்க்க வேண்டுமென்று விரும்புகிறேன், அது நம் நன்றிப்பெருக்கிற்கு இன்னும் பெரிதான நீதியை வைத்திருக்கிறது. நம் திரியேக தேவன் நம் எதிர்காலத்திற்காக வைத்திருப்பதுடன், இன்று நம் வாழ்வில் பெற்றிருப்பதை எவ்விதத்திலும் நாம் ஒப்பிட முடியாது. தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தையும், தேவன் அனைத்து மனுக்குலத்துக்காகவும் வேண்டி தம் மனதில் மெய்யாக நினைத்திருப்பதையும் நாம் சிந்திப்போமாக. தேவன்

1) நம்மை அவருடனான பூரண ஐக்கியத்திற்குள்ளாக வழி நடத்துவார்.

2) உயிர்த்தெழுந்த சரீரத்தை நமக்கு அருளுவார் – முற்றிலும் பூரணமானது.

3) கிறிஸ்துவுடன் அருகிலிருந்து இணையாக ஊழியம் செய்ய நம்மை அனுமதிப்பார்.

4) கிறிஸ்துவைப் போல் பூரணராக மாற்றுவார் – அவரது சாயலில் அவரது பண்பில்.

5) நம் அன்புக்குரியவர்களுடன் நம்மை மீண்டும் இணையச் செய்வார்.

6) நம் அனைத்து கவலை, காயம், பாவம், பொல்லாப்பு ஆகியவைகளை எடுத்துப் போட்டு அன்பு ஆளுகை செய்யும் பூரண சமாதானத்தை அருளிச் செய்வார்.

7) நமக்கு பூரண புது சிருஷ்டிப்பை வழங்குவார்.

நாம் நேரத்தை ஒதுக்கி, நம் எதிர்காலம், நம் திரியேக தேவன், இரட்சிப்பின் திட்டம் ஆகியவைகளையும், அவை நமக்கும் அனைத்து மனுக்குலத்திற்கும் அவரவருக்கு ஒதுக்கப்பட்ட காலக்கட்டத்தில் என்னவாகக் காணப்படுகிறது என நம்மை தீவிரமாக ஈடுபடுத்துவோமாக. தேவன் தமது குமாரனை அனுப்பினதினிமித்தம் தேவ அன்பானது நிரூபிக்கப்பட்டது. இயேசு கிறிஸ்து எனக்காகவும் உங்களுக்காகவும் மரித்து, அவர் நம்மை நேசிக்கிறார் எனவும் நம்முடன் தனது வெற்றியையும் மகிமையையும் பகிருவதாக வாக்குரைக்கிறார் எனவும் காண்பிக்கிறார்.

தேவன் நமக்கு எல்லாவற்றையும் கொடுக்கவும், நம் எதிர்காலத்தை பாதுகாக்கவும் விரும்புகிறார், நம்மிடத்தில் மிகச் சிறிதளவே திருப்பிக் கேட்கிறார், பெரிய தியாகங்களை நம்மிடத்தில் வற்புறுத்துகிறதில்லை, வெறும் நம் நம்பிக்கை, விசுவாசம் மற்றும் அவர் மீதான நம் அன்பை மட்டுமே.

நம் அன்பானது ஊக்கமுள்ளதாக இருக்கும்போது, நாம் டிவைன் சர்வீஸ்களில் ஐக்கியத்துடன் கூடிவருவதை கடினமானதாகக் கருதமாட்டோம், தேவன் மீதும் பிறனிடத்திலும் உள்ள நம் அன்பை உறுதியான விதத்தில் தெரிவிக்க வழிகளைக் கண்டறிவோம், மேலும் கர்த்தருக்கு நம் வரங்களுடன் ஊழியம் செய்வதில் ஊக்கமாயிருப்போம்.

கிறிஸ்துவில் ஒன்றாயிருத்தல் என்பது வருடத்தின் வெறும் மேற்கோள் வாசகத்தைக் காட்டிலும் மேலானது ; நாம் படிப்படியாக யாராக, எப்படியாக, எங்கே இருக்க விரும்புகிறோம். அது கடந்த காலத்தில், நிகழ்காலத்தில் மற்றும் வருங்காலத்திலும் என்றென்றும் கிறிஸ்துவுடன் பரிபூரணமான நிலையில் இணைந்திருக்க வேண்டுமென்பதே ஆகும்.

உங்களுக்கும் உங்கள் அன்பிற்குரியவர்களுக்கும் ஆசீர்வாதமான நன்றி செலுத்துதல் அமைய வாழ்த்துகிறேன்.

மார்க் வோல்.

**Thanksgiving**
2 October 2022
Tamil